**செ. கு. எண்: 007** **நாள்: 12.01.2020**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின்

அறிக்கை – 12.1.2020

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், வீரபெருமாள்பட்டி கிராமம் அருகே, **11.1.2020** அன்று இரவு **12** மணியளவில் இலுப்பூரிலிருந்து பரம்பூர் நோக்கி சென்று கொண்டிருந்த பொலிரோ வாகனம் எதிர்பாராத விதமாக சாலையோரமாக இருந்த மரத்தில் மோதிய விபத்தில், காரில் பயணம் செய்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்களின் உதவியாளர் திரு. வெங்கடேசன் மற்றும் வாகன ஓட்டுநர் திரு. செல்வம் ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த திரு. வெங்கடேசன் மற்றும் திரு. செல்வம் ஆகிய இருவரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த செய்தி குறித்து அறிந்தவுடன் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களை நான் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு தேவையான அனைத்து உதவிகளையும் உடனடியாக செய்து கொடுக்கவும், உயரிழந்தவர்களின் குடும்பத்தினரை சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் கூறவும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொண்டேன்.

K. பழனிசாமி
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**